**கவனிக்க.-** *2006.05.19 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி பகுதி IV (ஆ) பிரசுரிக்கப்படவில்லை.*

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1447 - 2006 මැයි 26 වැනි සිකුරාදා - 2006.05.26

*1447 ஆம் இலக்கம் - 2005 ஆம் ஆண்டு மே மாதம் 26 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி I : தொகுதி (IIஆ) – விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவைசெய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | – | உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள் | – |
| கேள்விப்பத்திர முடிவுகள் பற்றிய அறிவித்தல்கள் | – | அந்நிய குடிவகை உத்தரவுச் சீட்டு விண்ணப்பங்கள் | – |
| பொருட்கள் விற்பனவும் பிறவும் | 480 | ஏல விற்பனைகள் | 481 |
| ஆய விற்பனையும் குத்தகையும் | 480 | நானாவித அறிவித்தல்கள் | – |


*வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான*

### முக்கிய அறிவித்தல்கள்

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையின் ஒவ்வொரு பகுதியினதும் ஒவ்வொரு தொகுதியின் இறுதியிலும் ஒவ்வொரு மாதத்தின் முதல் வார வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டிருக்கும் வாராந்த வர்த்தமானியிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் தேதிகள், நேரங்கள் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதியிலும் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசி நாள்* ***வர்த்தமானியில் அறிவித்தல் பிரசுரமாகும் தேதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணியாகும்.*** *வெற்றிடங்களுக்கான விண்ணப்பங்களுக்கும் கேள்விப்பத்திரங்களுக்கும் கடைசித் தேதியும் நேரமும், ஏல விற்பனைக்குத் தேதியும் நேரமும் குறிக்கும் அறிவித்தல்கள் தயாரிக்கப்படும்போது மேற்கண்ட மாற்றத்துக்குக் கவனஞ் செலுத்துமாறும் பிரசுரமாகும் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறையுள்ளவர்கள் ஆக்கபூர்வமாகவும் வெற்றிகரமாகவும் பங்குகொள்வதற்கியலும் வகையில் அறிவித்தல்கள் அரசாங்க அச்சகத்திற்கு அனுப்பப்படச் செலவாகும் நேரத்தையும் அவை பிரசுரமாகும் தேதியையும் கருத்திற் கொள்ளுமாறும் எல்லா அரசாங்கத் திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆதியன அறிவுறுத்தப்படுகின்றன.*

*வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கான எல்லா அறிவுறுத்தல்களும் கண்டிப்பாக அவை பிரசுரமாகும் தேதிக்கு* ***இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு முன்*** *இத்திணைக்களத்தை வந்தடைய வேண்டும். அதாவது 2006, யூன் 2 ஆந் தேதி வெள்ளிக்கிழமை வர்த்தமானியிற் பிரசுரிக்கப்பட வேண்டிய அறிவித்தல்கள் 2006, மே 19 ஆந் தேதி நண்பகலிலோ அதற்கு முன்னரோ அரசாங்க அச்சகத்தை வந்தடைய வேண்டும்.*

**லக்ஷ்மன் குணவர்தன,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2005 ஆம் வருடம் சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

# பொருட்கள் விற்பனவும் பிறவும்

## நீதிவான் நீதிமன்றம் - யாழ்ப்பாணம்

*நீதிமன்றினால் பறிமுதல் செய்யப்பட்டதும் இதுவரை உரிமை கோரப்படாததுமான பொருட்கள் விற்பனை*

யாழ்ப்பாண நீதிவான் நீதிமன்றில் பின்வரும் வழக்குகளில் பறிமுதல் செய்யப்பட்டதும் இதுவரை உரிமை கோரப்படாததுமான பின்வரும் பொருட்கள் 24.06.2006 ஆந் திகதி இந்நீதிமன்ற வளவினுள் வைத்துக் காலை 9.00 மணிக்கு பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.

2. யாராவது இங்கு குறிப்பிடப்பட்டுள்ள ஏதாவது பொருட்களில் உரிமை கோருமிடத்து, விற்பனை தொடங்குவதற்கு அரை மணித்தியாலயத்திற்கு முன்பு தமது கோரிக்கையை சமர்ப்பிக்க வேண்டும்.

3. பொது மக்கள், மன்றின் பதிவாளரின் அனுமதியுடன் விற்பனைக்கு அரை மணித்தியாலத்திற்கு முன்பு பொருட்களைப் பார்வையிடலாம்.

4. ஏலவிற்பனையின்போது விற்பனைக்காக வைக்கப்பட்டுள்ள ஏதாவது பொருட்களின் மதிப்பு விலை கிடைக்காதவிடத்து, அப்பொருளின் ஏலவிற்பனையை மீளப் பெறும் உரிமையை மன்று தன்னகத்தே வைத்திருக்கும்.

5. விற்கப்பட்ட பொருட்களுக்குப் பணத்தை உடன் செலுத்தி பொருட்களை உடனடியாக நீதிமன்ற வளவில் இருந்து அகற்றவேண்டும். எல்லாக் கொடுப்பனவும் காசாகவே செய்யப்பட வேண்டும். காசோலைகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

இ. த. விக்னராஜா,
நீதிவான்,
நீதிவான் நீதிமன்றம்,
யாழ்ப்பாணம்.

நீதிவான் நீதிமன்றம்,
யாழ்ப்பாணம்,
27.04.2006

| தொடர் இல. | வழக்கு இல. | பொருட்களின் விபரம் | எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1 | ஏ/156/05 | சுப்பர் கப் மோட்டார் சைக்கிள் | 01 |
| 2 | ஏ/311/03 | மோட்டார் சைக்கிள் | 01 |
| 3 | ஏ/229/04 | குத்துவிளக்குகள் | 02 |
| 4 | ஏ/217/05 | கை மணிக்கூடுகள் | 06 |
| 5 | ஏ/420/05 | தொகைகாட்சி | 01 |
| | ஏ/420/05 | சார்ஜர்ஸ் | |
| | ஏ/420/05 | கமெரா | 01 |
| | ஏ/420/05 | தையல் இயந்திரங்கள் | 07 |
| | ஏ/420/05 | மோட்டார்கள் | 19 |
| 6 | ஏ/422/05 | முட்கம்பி வயர் சுருள் | 01 |
| | ஏ/422/05 | சீலிங்ஃபான் | 01 |
| | ஏ/422/05 | தொலைக்காட்சி | 01 |
| 7 | ஏ/426/05 | துவிச்சக்கரவண்டிகள் | 15 |
| 8 | ஏ/459/05 | தொலைக்காட்சி | 01 |
| | ஏ/459/05 | கைக்கடிகாரங்கள் | |
| | ஏ/459/05 | மோட்டார் சைக்கிள்கள் | 02 |
| 9 | 9020 | கதவு | 01 |
| 10 | ஏ/128/05 | மோட்டார் சைக்கிள் | 01 |
| 11 | 988 | வானொலி | 01 |
| 12 | பி/284/99 | கைக்கடிகாரம் | 01 |
| 13 | பி/17/03 (7210) | பழுதடைந்த தொலைக்காட்சி | 01 |
| 14 | பி/18/03 (7209) | பழுதடைந்த தொலைக்காட்சி | 01 |
| 15 | 11734 | வானொலிப் பெட்டிகள் | 04 |
| 16 | 1298 | வானொலி | 01 |
| 17 | பி/109/01 | துவிச்சக்கரவண்டி | 01 |
| 18 | 1714 | துவிச்சக்கரவண்டி | 01 |
| 19 | 1043 | துவிச்சக்கரவண்டிகள் | 02 |
| 20 | 4385 | துவிச்சக்கரவண்டி | 01 |
| 21 | 8174 | துவிச்சக்கரவண்டிகள் | 03 |
| 22 | பி/278/99 | ஹாண்ட் பம்ப் | 01 |
| 23 | - | வெற்றுப் போத்தல்கள், பரல்ஸ்,கான், பாத்திரங்கள், செப்பு வளயம், வயர்கள் | |

5-333

# ஆய விற்பனையும் குத்தகையும்

## புத்தளம் மாவட்டம், நாத்தாண்டிய பிரதேச செயலாளர் பிரிவில் கள்ளுத்தவறணை விற்பனையும் குத்தகை விற்பனையும்

*(2006 ஆம் ஆண்டு ஆடி 1 ஆந் திகதி முதல் 2007 ஆம் ஆண்டு ஆனி மாதம் 30 ஆந் திகதிவரை)*

2006ஆம் ஆண்டு ஆடி01 ஆந் திகதி முதல் 2007 ஆம் ஆண்டு ஆனி மாதம் 30 ஆந் திகதி வரையுள்ள காலத்தில் இத்துடன் இணைக்கப்பட்டுள்ள கள்ளுத்தவறையில் குறிப்பிட்டுள்ள நிபந்தனைகளுக்கு அமைய சில்லறையாக கள்ளு விற்பனை செய்வதற்கான கேள்விப்பத்திரங்கள்ஏற்றுக்கொள்ளப்படும்.

(அ) தற்பொழுது அமுலில் இருக்கும் எல்லா அனுமதிப்பத்திரங்கள் பொது நிபந்தனைகளுக்கு,

(ஆ) 1982 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 20 ஆந் திகதி 207 ஆம் இலக்க கள்ளுத் தவறணைகளைக் குத்தகைக்கு இடும் நிபந்தனைகளுக்கு அமைவாகவும்.

2. ஒவ்வொரு பிரதேச செயலாளர் அலுவலகத்திலும் பெற்றுக்கொள்ளக்கூடிய உரிய படிவங்களில் கேள்வியைச் சமர்ப்பிப்பதுடன் பின்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள விளம்பரங்களுக்கு அமைய வைப்புப்பணமாக பிரதேச செயலாளர் அலுவலகத்தில் செலுத்துவதற்கான பற்றுச்சீட்டையும் விண்ணப்பிக்கும் தொகையில் 15% பெறுமதியுள்ள அத்தாட்சி சான்றிதழும் இணைக்கப்படல் வேண்டும்.

கேள்விப்பத்திரங்கள் முறையாக மெழுகிடப்பட்ட உறையில் இடப்பட்டு இடது பக்கத்து மேல் முனையில் தவறணையின் பெயரும், இலக்கமும் பின்வருமாறு குறிப்பிடல் வேண்டும்.

"................. இலக்க................. கள்ளுத்தவறணைக்குரிய கேள்விப்பத்திரம்", 2006.06.06 ஆந் திகதி காலை 10.00 மணிக்கு முன்பதாக நாத்தாண்டிய பிரதேச அலுவலத்தில் உள்ள கேள்விப்பத்திர பெட்டியில்அதனை இடுதல் அல்லது பதிவுத்தபால் மூலம் மேற்குறிப்பிடப்பட்டுள்ள நேரம் திகதிக்கு முன்கிடைக்கக்கூடியதாக அனுப்பப்படல்வேண்டும்.

4. கேள்விப்பத்திரங்கள் 1982 ஒகத்து 20 ஆந் திகதிய 20ஆம் இலக்க, இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டுள்ள கள்ளுத்தவறணைகளைக் குத்தகைக்கு இடும் நிபந்தனைகளுக்கமைய இடுதல் வேண்டும்.

5. 2006.06.06 ஆந் திகதி காலை 10.00 மணிக்கு கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளல் முடிவடைந்த உடனேயே எல்லாக் கேள்விப்பத்திரங்களும் திறக்கப்படும். அந்நேரம் கேள்விப்பத்திர கோரிக்கையாளர்கள் இச்செயலகத்தில் சமுகமளித்திருத்தல் வேண்டும்.

6. இவ்வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைய விற்பனை பெறாத தவறணைகள் ஏதும் இருப்பின் இவைக்காக விற்பனை மீண்டும் 2006.06.20ஆந் திகதி காலை 10.00 மணிக்கு நடைபெறும்.

7. இது தொடர்பாக மேலதிக விவரங்கள் இச்செயலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

எச்.எம். எல். சந்திரசிறி,
பிரதேச செயலாளர்,
நாத்தாண்டிய.

பிரதேச செயலகம்,
நாத்தாண்டிய,
2006.05.04.

| பகுதி | கிராமம் | கேள்விப்பத்திரம் ஏற்கும் நேரமும் இறுதித் திகதியும் | கேள்விப்பத்திரம் வைப்புப் பணம் பணம் ரூபா ச. |
|---|---|---|---|
| நாத்தாண்டிய | மூதுகட்டுவ | 2006.06.06 | 1000.00 |
| நாத்தாண்டிய | கட்டுநேரிய | 2006.06.06 | 1000.00 |

5-370

## ஏல விற்பனைகள்

**மக்கள் வங்கி - திம்பிறிகஸ்யாய கிளை**

1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க சட்டத்தால் திருத்தப்பட்டவாறான 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க, மக்கள் வங்கிச் சட்டத்தின் 29டி என்னும் பிரிவின் கீழ் விற்பனை அறிவித்தல்

**மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம் சல்பிட்டி கோரளை பல்லேபற்று மஹரகம பிரதேச சபை எல்லைக்குள் கங்கொடவிலையில் அமைந்த அம்பஹ கும்புற மற்றும் லன்சியாதெனிய ஒவிட்ட என்றழைக்கப்படும் காணியின்அனுமதி பெற்ற அளவையாளர் சி. ஏ. விதாரண என்பவரால் தயாரிக்கப்பட்ட 1992.05.30 ஆந் திகதியும் 9224இலக்கமும் கொண்ட வரைபடத்தில் லொட் 2 லொட் 4 (திரும்பும் சுற்றுக்காக ஒதுக்கப்பட்டுள்ளது) மற்றும் அளவையாளர் டி. ஜெ. நாணயக்கார என்பவரால் 1970.11.25 ஆந் திகதியும் 1523 இலக்கமும் கொண்ட வரைபடங்கள் லொட் 1 ஈ (10 அடி அகல பாதைக்கு ஒதுக்கப்பட்டுள்ளது என குறிப்பிடப்பட்ட காணியின் பிரித்து நிர்ணயிக்கப்பட்ட எல்லை பிரிவுகளும், கங்கொடவில் 1ஆம் ஒழுங்கை வரிமதிப்பீட்டு இல. 19/ 4, பாதை உரிமையுடன்அங்குள்ள கட்டிடங்கள் மற்றும் யாவும் உட்பட ஏலவிற்பனை**

**(காணியின் விஸ்தீரணம் : 2ஏ. 0றூ. 0.650பே.)**

**லொட் 4, 0ஏ. 0றூ. 2.10.பே. (திரும்பும் சுற்றுக்காக ஒதுக்கப்பட்டது) லொட் 1ஈ, 0ஏ.0றூ.4.9பே. (10 அடி அகலப் பாதைக்கு ஒதுக்கப்பட்டது.)**

மக்கள் வங்கியினால் எமக்கு வழங்கப்பட்ட அதிகாரத்தின்கீழ் 2006. யூன் 14 ஆந் திகதி புதன்கிழமை மு. ப. 10.30 மணிக்கு மேற்கண்ட சொத்தை அதே இடத்தில் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்வோம்.

***தீர்மான அறிவித்தல்களுக்கு.***- *தயவு செய்து 2005.01.07 அரசாங்கஅறிவித்தலையும் 2004.12.24 ஆந்திகதி "டெய்லி நியூஸ்", "தினமின" பத்திரிளையும் பார்க்கவும்.*

**கட்டணம்செலுத்தும் முறை.**- வெற்றிகரமான கொள்வனவாளர் ஏலத்தில் முடிவில் பின்வரும் கட்டணங்களை காசாகச் செலுத்தல் வேண்டும்.

(1) ஒவ்வொரு விற்பனைக்கும் கொள்வனவு செய்யப்படட விலையின் 10% உம் ;

(2) உள்ளூர் அதிகார சபையின் வரிக்கென உள்ளூராட்சி அதிகார சபைக்கு 1 % ;

(3) விற்பனை விலையின் ஏலதார் தரகு 2 1/2 % (இரண்டரை வீதம்) ;

(4) எழுதுவினைஞர் மற்றும் கூவுவோர் கட்டணம் ரூபா 500 ;

(5) விற்பனைச் செலவு ஏனைய கட்டணம் இருப்பின் அப்பணம் ;

(6) விற்பனைச் சான்றிதழுக்குரிய முத்திரைக் கட்டணம்.

கொள்வனவு விலையின் மிகுதி 90% ஆன பணத்தைத் விற்பனைத் திகதியில் இருந்து 30 நாட்களுக்குள் "கொழும்பு 1, டியூக் வீதி, இல. 11, மக்கள் வங்கி, (மேற்கு வலயம்) உதவி பொது முகாமையாளர்" இடம் செலுத்த வேண்டும். தொலைபேசி இல. : 2387068, 2393678.

உரித்து உறுதி மற்றும் சம்பந்தப்பட்ட ஆவணங்களை மேற்படி முகவரியில் பெற்றுக்கொள்ளலாம்.

மேற்படி தொகையினை மேலே கூறப்படுள்ள பிரகாரம் 30 நாட்களுக்குள் செலுத்தப்படாவிட்டால் ஏற்கனவே செலுத்திய கொள்முதல் விலையின் 10% தொகையினை பறிமுதல் செய்யவும் சொத்தினை மீள் விற்பனை செய்வதற்கும் வங்கிக்கு அதிகாரமுண்டு.

சொக்மன் மற்றும் சமரவிக்ரம,
இலங்கையில் உள்ள தனியார் மற்றும்
அரச துறை வங்கிகளுக்கான பட்டய ஏலதாரர்
மற்றும் மதிப்பீட்டாளர் மற்றும் நீதிமன்ற
ஆணையாளர்

*தலைமை அலுவலகம் :*

24, டொரிங்டன் வீதி,
கண்டி.
தொலைபேசி இல. 081-2227593
081-2224371
தொலைநகல் இல. : 081-2224371

*நகர அலுவலகம் :*

55ஏ, தர்மபால மாவத்தை,
கொழும்பு 03.
தொலைபேசி இல.: 2441761,
2448526
தொலைநகல் இல.: 2448526,
2575214

மின் அஞ்சல் :
samera@sri.lanka.net

5- 359

## இலங்கை வங்கி

*1968 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்கச் சட்டத்தாலும் 1974 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க அதிகாரச் சட்டத்தாலும் திருத்தப்பட்டவாறு இலங்கை வங்கிக் கட்டளைச் சட்டம் (397 ஆம் அத்தியாயம்) 22 ஆம் பிரிவினதும் அதன் திருத்தங்களினதும் கீழ் விற்பனை அறிவித்தல்*

### சொத்து, நிலமனை ஏலவிற்பனை

இலங்கை வங்கிப் பணிப்பாளர்கள் சபை இலங்கை வங்கி கட்டளைச் சட்டம் 19 ஆம் பிரிவின் கீழ் எடுத்த தீர்மானத்துக்கமைய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 2003, நவெம்பர் 7 ஆந் திகதிய 1314 ஆம் இலக்க வர்த்தமானியிலும் 2003.10.29 ஆந் திகதிய "டெய்லி நியூஸ்", "தினமின" மற்றும் "தினகரன்" ஆகிய பத்திரிகைகளிலும் வெளியிடப்பட்ட அறிவித்தல்களுக்கமைய நிலுவை முதலையும் விற்பனைத் திகதிவரை வருமதியாக உள்ள வட்டியையும் மேற்குறிப்பிட்ட கட்டளைச்சட்டத்தின் பிரிவு 26 இன் கீழ் அறவிடவேண்டிய செலவு மற்றும் பணங்களையும் அறவிடும் பொருட்டு இங்கு கீழ் அட்டவணையில் விபரித்த சொத்தையும் நிலமனையையும் இல. 48/1, கலுகல்பிட்டிய, பதுளை என்னும் முகவரியைச் சேர்ந்த ஏலதாரர் திரு. W. ஜெயதிலக 2006.06.26 ஆந் திகதி மு. ப. 10.00 மணிக்கு அதே இடத்தில் வைத்து பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்வாரென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

### அட்டவணை

ஊவா மாகாணம், பதுளை மாவட்டம், மஹியங்கனை உதவி அரசாங்க அதிபர் பிரிவில் பின்தென்ன கோறளையில் அலுத்நுவர கிராம உத்தியோகத்தர் பிரிவில் அலுத்நுவரயில் அமைந்த "தம்பராவ ஜனபதய" என அழைக்கப்படும் காணியில் உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் ரி. பீ. அத்தநாயக்க தயாரித்த 1997, பெப்புருவரி 2 திகதியிட்ட வரைபடம் இல. 6842 ஏ இல் துண்டு 2 என அடையாளமிடப்பட்ட பிரிக்கப்பட்ட குறித்த காணித்துண்டு – வடக்கில் : வரைபடம் இல. 554 இல் துண்டு 1 உம், மாட்டின் சில்வாவின் காணியும் ; கிழக்கில் : ரொஹானயிலிருந்து தம்பராவ வரை பெருந்தெருவும், வரைபடம் இல. 615 இல் துண்டு 1 உம் ; தெற்கில் : ஓடைக்கு ஒதுக்கப்பட்டிருப்பதும் பூஜா நகரய வரை வழிப்பாதையும் தம்பராவயும் ; மேற்கில் : டி 01 ஓடைக்கு ஒதுக்கப்பட்டதும் எப். சி. 19 ஓடைக்கு ஒதுக்கப்பட்டதும் எல்லைகளாகக் கொண்டு மேற்குறிப்பிட்ட வரைபடம் இல. 6842ஏ இன்படி மூன்று றூட் பத்து பேர்ச்சுகள் (0ஏ. 3றூ. 10பே.) விஸ்தீரணமுடைய காணியும் அங்கு அமைந்துள்ள சலதுமாகும். இது பதுளை காணிப்பதிவகத்தில் எல். டீ. ஓ. 8/247 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

பணிப்பாளர்கள் சபையின் கட்டளைப்படி,

டபிள்யூ. எம். பி. விஜேசூரிய,
முகாமையாளர்.

இலங்கை வங்கி,
மஹியங்கனை.

5-394

**வரையறுக்கப்பட்ட சம்பத் வங்கி**

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 9 ஆம் பிரிவின் கீழான விற்பனை அறிவித்தல்*

கணக்கு இல. 0098 1000 0607 - இந்தீவரி அக்வா (பிரைவெட்) லிமிட்டெட்

"2005.12.19 ஆந் திகதியிடப்பட்ட அரசாங்க வர்த்தமானியையும், 2005.11.12 ஆந் திகதிய "திவயின", "ஐலண்ட்", மற்றும் "தினக்குரல்" எனும் பெயரிலான தினசரி செய்திப் பத்திரிகைகளிலும் பிரசுரிக்கப்பட்ட 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் 2005, பெப்புருவரி 22 ஆந் திகதியிடப்பட்ட வரையறுக்கப்பட்ட சம்பத் வங்கிப் பணிப்பாளர்கள் சபையினால் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்திற்கமைய நான்கு இலட்சத்து நாற்பத்தெட்டாயிரத்து எழுநூற்று நாற்பத்தெட்டு அமெரிக்க டொலர் இருபத்தைந்து சதம் (ரூபா அ. டொ. 4,48,748.25) கொண்ட தொகையை மேலும் 2004, திசெம்பர் 10 ஆந் திகதியிலிருந்து விற்பனை திகதிவரை இரண்டு இலட்சத்து எண்பத்து மூவாயிரம் அமெரிக்க டொலர் (அ. டொ. 2,83,000) கொண்ட தொகை மீது ஆண்டுக்கு இரண்டு தசம் ஏழு சதவீத (2.7%) வட்டியுடனும் உறப்பட்ட விளம்பரச் செலவுகள் மற்றும் வேறு கட்டணங்கள் (எவையேனும் கொடுப்பனவுகள் பெறப்பட்டிருப்பின் அவற்றைக் கழித்து) ஆகியவற்றுடனும் சேர்த்து அறவிடுவதற்காக, இத்துடனுள்ள அட்டவணையில் விவரிக்கப்பட்டுள்ள ஆதனத்தை, கொழும்பைச் சேர்ந்த உத்தரவுபெற்ற ஏலதாரர் டன்ஸ்டன் கெலார்ட் அவர்களால் 2006.06.20 ஆந் திகதிய மு. ப. 11.30 மணிக்கு அதே இடத்தில் பகிரங்க ஏலம்மூலம் விற்பனை செய்வாரென இத்தால் அறிவிக்கப்படுகின்றது."

**அட்டவணை**

வடமேல் மாகாணம், புத்தளம் மாவட்டம், பிட்டிகள் கோறளை வடக்கு ஆரச்சிக்கட்டுவ பிரதேச செயலாளர் பிரிவில் முன்னேஸ்வரம் வடக்கு சிட்டமடம கிராமத்தில் அமைந்த சென்ட் மாட்டின்ஸ் எஸ்டேட் என அழைக்கப்படும் காணியிலிருந்து உத்தரவுபெற்ற நில அளவையாளர் எம். பீ. களவானேகம அவர்களால் தயாரிக்கப்பட்டு 1994, நவெம்பர் 14 ஆம் திகதியிடப்பட்ட நிலஅளவை வரைபடம் இல. 724 இல் குறிப்பிடப்பட்டு துண்டு 1 என அடையாளமிடப்பட்டதுமான பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்ட காணித்துண்டு முழுவதும் அதன்கண் அமைந்த மண், மரங்கள், பயிர்கள், கட்டிடங்கள் மற்றும் சகலதுடன். சொல்லப்பட்ட துண்டு 1 இன் எல்லைகளாவன- வடக்கில் : மேல் கூறப்பட்ட நிலஅளவை வரைபடத்தில் குறிப்பிடப்பட்ட தேசிய கால்நடை அபிவிருத்திச் சபைக்குச் சொந்தமான பெருந்தோட்டம் ; கிழக்கில் : மேல் கூறப்பட்ட காணியின் ஒரு பாகம் ; தெற்கில் : மேல் கூறப்பட்ட நிலஅளவை வரைபடத்தில் குறிப்பிடப்பட்ட ரோட் மற்றும் மேற்கில் : மேல் கூறப்பட்ட காணியின் ஒரு பாகம் என்பவையாகும். மேற்கூறப்பட்ட வரைபடம் இல. 724 இற்கமைய இந்தக் காணி இரண்டு ஏக்கர் மூன்று றூட் இரண்டு பேர்ச்சஸ் (2ஏ. 3றூ. 2பே.) விஸ்தீரணமுடையது. இந்தக் காணி சிலாபம் காணி பதிவகத்தில் தொகுதி/பக்கம் C 143/39 இன் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

திரு. எஸ். சுதர்சன்,
கம்பனிச் செயலாளர்.

5-391

**செலான் வங்கி லிமிட்டெட் - திஸ்ஸமஹாராமக் கிளை**

*1990 ஆம் ஆண்டு வங்கியினால் கடன்களை மீள அறவிடுதல் 4 ஆம் இலக்கச் சட்டத்தின் (விஷேட ஏற்பாடுகள்) 4 ஆம் பிரிவின் கீழ் விற்பனை*

கணக்கு இல. : 0370-03003903-001

**தென் மாகாணம், அம்பந்தோட்டை மாவட்டம், மாகம் பத்துவ, ரனகெலிய தெற்கில் துண்டு இல. 122262-122723 வரைவு இலக்கம் 5813 சீ. எஸ். ஜயவர்தன உத்தரவுபெற்ற நிலஅளவையாளரினால் எல்லைகள் வரையறுக்கப்பட்டதும் 1997 ஒகத்து 31 ஆந் திகதி பதிவுசெய்யப்பட்டதுமான இரண்டு ஏக்கர் மூன்று தசம் ஐம்பத்து நான்கு பேர்ச்சஸ் (2ஏ. 0றூ. 3.54பே.) விஸ்தீரணம் கொண்ட பெறுமதிவாய்ந்த காணி, நிலம் மற்றும் அதில் அமைந்துள்ள கட்டிடங்கள் மரம், செடிகொடிகள் அடங்கலாக அனைத்தையும் கொண்டுள்ள துண்டு இல. சீ 44/221 அம்பாந்தோட்டை காணிப் பதிவு காரியாலயத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளதுமான காணி ஏலவிற்பனை**

*கடன்பட்டார் என்ற வகையில் திஸ்ஸமஹாராம எனும் முகவரியில் வசிக்கும் காணி உரிமையாளர் விரித்தமுல்ல கமகே சுமனசேன என்பவருக்கு வழங்கப்பட்ட வசதிகளுக்காக செலான் வங்கி லிமிட்டெட்டிற்கு ஈடுவைக்கப்பட்ட காணி).*

மேலே விபரிக்கப்பட்ட காணியை நான் 2006 ஆம் ஆண்டு யூன் மாதம் 20 ஆந் திகதி பி. ப. 2.00 மணிக்கு அதே இடத்தில் பகிரங்க ஏலத்தின் மூலம் விற்பனை செய்யவுள்ளேன்.

**தீர்மானம் பற்றிய அறிவித்தலுக்கு.**- தயவுசெய்து 2006.03.10 ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானி மற்றும் 2006.02.17 ஆந் திகதிய "டெயிலி மிரர்" மற்றும் "லங்காதீப" மற்றும் 2006.02.23 ஆந் திகதிய "வீரகேசரி" பத்திரிகைகளையும் பார்க்கவும்.

**காணியைச் சென்றடைகின்ற வழி.**- திஸ்ஸமஹாராம பஸ் நிலையத்திலிருந்து கிரிந்த வீதி ஊடாக சுமார் 5 கி. மீ. ரணகெலிய சந்தி வரை சென்று வலது பக்கமாக ரனகெலிய வீதி ஊடாக மீண்டும் சுமார் 600 மீட்டர் வரை சென்று குறித்த காணியைச் சென்றடையலாம். இது பதிரத்னகம என்றழைக்கப்படுகின்ற விசாலமான காணியின் பிரிக்கப்பட்ட காணியாவதுடன் மிக இலகுவாகக் கண்டறிந்து கொள்ள முடியும்.

**கட்டணம் செலுத்தும் முறை.**- வெற்றிகரமான கொள்வனவுதாரர் ஏலவிற்பனை முடிவில் பின்வரும் தொகைகளைக் காசாகச் செலுத்தல் வேண்டும் :

கொள்வனவு விலையின் பத்துவீதம் (10%), விற்பனைவரியாக உள்ளூர் அதிகார சபைக்குச் செலுத்த வேண்டியது ஒரு வீதம் (1%), ஏலதாரர் கட்டணமாக இரண்டரை வீதம் (2 1/2%), விற்பனை நிலத்துக்கான நொத்தாரிசு உறுதிப்படுத்தல் கட்டணம் ரூபா 2,000, இலிகிதர் மற்றும் கூவுவோர் கூலி ரூபா 500, விற்பனையின்பேரில் செலவிடப்பட்ட மொத்த விளம்பரச் செலவு, கொள்வனவு விலையில் மிகுதி 90% விற்பனைத் திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் செலான் வங்கி லிமிட்டெட்டில் வைப்புச் செய்தல் வேண்டும்.

காணி உறுதி மற்றும் ஏனைய சம்பந்தப்பட்ட ஆவணங்களைக் "கொழும்பு 3, காலி வீதி, இல. 90, செலான் வங்கி லிமிட்டெட், பிரதிப் பொது முகாமையாளர் (சட்டம்)" இடமிருந்து பெற்றுக்கொள்ளவும் முடியும். தொலைபேசி : 2456284, 2456285, 2456263

துசித கருணாரத்ன (ச. நீ),
அனுமதிபெற்ற ஏலதாரர்
நீதிமன்ற ஆணையாளரும்.

ரி அன்ட் எச் ஒக்சன்,
இல. 50/3, விஹார மாவத்தை,
கொலன்னாவ.
தொலைபேசி : 2696155, 2572940

5-392

---

### இலங்கை வங்கி

*1968 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்க சட்டத்தாலும் 1974 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க அதிகாரச் சட்டத்தாலும் திருத்தப்பட்டவாறு இலங்கை வங்கிக் கட்டளைச் சட்டம் (397 ஆம் அத்தியாயம்) 22 ஆம் பிரிவின் கீழ் விற்பனை அறிவித்தல்*

**சிங்கப்பூர் சென்ர், ஏக உரிமையாளர் திரு. பி. எச். டி. எஸ். குணதுங்கவினால் ஈடுவைக்கப்பட்ட ஆதனத்தின் விற்பனை**

இலங்கை வங்கிப் பணிப்பாளர்கள் சபை இலங்கை வங்கிக் கட்டளைச் சட்டம் 19 ஆம் பிரிவின்கீழ் எடுத்த தீர்மானத்துக்கமைய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 2004.10.29 ஆந் திகதி 1365 ஆம் இலக்க வர்த்தமானியிலும் 2004.10.18 ஆந் திகதி "தினமின", "டெய்லிநியூஸ்", "தினகரன்" ஆகிய பத்திரிகைகளிலும் வெளியிடப்பட்ட அறிவித்தல்களுக்கமைய நிலுவை முதலையும் விற்பனைத் திகதிவரை வருமதியாக உள்ள வட்டியையும் மேற்குறிப்பிட்ட கட்டளைச் சட்டத்தின் பிரிவு 26 இன் கீழ் அறவிடவேண்டிய செலவு மற்றும் பணங்களையும் அறவிடும் பொருட்டு இங்கு கீழ் அட்டவணையில் விபரித்த சொத்தையும் நிலமனையையும் இல. 55ஏ, தர்மபால மாவத்தை, கொழும்பு 3 என்னும் முகவரியைச் சேர்ந்த உத்தரவுபெற்ற ஏலதாரர்கள் திருவாளர்கள் சொக்மன் மற்றும் சமரவிக்ரம 2006.06.17 ஆந் திகதி சம்பந்தப்பட்ட ஆதனத்திற்கு முன்னால் குறிப்பிடப்பட்ட நேரத்தில் அதே இடத்தில் வைத்து பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்வாரென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

**விற்பனைக்குரிய ஆதனங்கள்**

ஆதன இல. I - மு. ப. 11.00 மணிக்கு

**அட்டவணை**

(அ) மத்திய மாகாணம், கண்டி மாவட்டம், யட்டிநுவர கங்கபளாத பேலவையில் அமைந்துள்ள கிரிவன்கொடஹேன தற்போதைக்கு வத்த என அழைக்கப்படும் காணியின் நிமித்தம் உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் திரு. எஸ். எம். கே. பி. மாவளகெதர அவர்களால் தயாரிக்கப்பட்ட 1999.08.22 ஆந் திகதிய இல. 1510 கொண்ட வரைபடத்தில் விபரிக்கப்படும் விதமாக அக்காணியல் இருந்து ஒரு றூட் பதினெட்டு தசம் ஒன்பது நாலு பேர்ச்சுகள் (0ஏ. 1றூ. 18.94) விஸ்தீரணம் கொண்டதாகவும் சொல்லப்பட்ட காணியிலிருந்து பிரித்து வேறாக்கி அப்புறப்படுத்தப்பட்டதுமான வடக்கில் : பாதை ; கிழக்கில்: அதே காணியின் மிகுதியான ஒரு பகுதியும் யூ. பி. ஜயரத்ன உரிமைகோரும் கிரிவங்கொடஹேன தற்போது வத்த காணி ; தெற்கில்: அதே காணியின் எஞ்சிய ஒரு பகுதியும் ; மேற்கில் : பி. எச். சோமரத்ன உரிமைகோரும் 718 இலக்க வரைபடத்தின் லொட் 2 என்னும் எல்லைகளுக்கு உட்பட்ட காணியும் அத்துடன் காணியில் உள்ள அனைத்துமாகும். இது கண்டி காணிப்பதிவகத்தில் பி 397/232 இல் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

ஆதன இல. II - பி. ப. 1.30 மணிக்கு

**அட்டவணை**

(ஆ) மத்திய மாகாணம், கண்டி மாவட்டம், யட்டிநுவர கங்கபளாத யட்டிநுவர பிரதேச சபை எல்லைக்குட்பட்ட கொப்பகடுவ கிராமத்தில் அமைந்துள்ள கெடதளாவே வத்த (உறுதியின் பிரகாரம் கெதலே வத்த) என்றழைக்கப்படும் காணியின் நிமித்தம் உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் திரு. பி. டபிள்யூ. விஜேவர்தன அவர்களால் 1994 ஆவணி மாதம் 12 ஆந் திகதி தயாரிக்கப்பட்ட 4954 ஆம் இலக்க வரைபடத்தில் விபரிக்கப்படும் விதமான அதே காணியில் இருந்து பிரித்து ஒதுக்கிய இருபத்தைந்து பேர்ச்சுகள் (0ஏ. 0றூ. 25பே.) விஸ்தீரணம் கொண்டதாகவும் வடக்கில் : 2968 இல. வரைபடத்தில் லொட் 1 ; கிழக்கில் : கிராமத்தில் இருந்து பிரதான வீதிக்குச் செல்லும் 10 அடி அகலப்பாதை ; தெற்கில் : லொட் 2 ; மேற்கில் : 1144 ஆம் இலக்க வரைபடத்தின் லொட் 2 பி ஆகிய எல்லைகளுக்கு உட்பட்ட காணியாகும். இது கண்டி மாவட்ட காணிப்பதிவகத்தில் பி 409/68 இல் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

(இ) மேற்குறிப்பிட்ட கொப்பகடுவ கிராமத்தில் அமைந்துள்ள கெடதளாவே வத்த (உறுதியின் பிரகாரம் கெதலே வத்த) என்றழைக்கப்படும் காணியில் இருந்து சொல்லப்பட்ட 4954 ஆம் இலக்க வரைபடத்தின்படி அக்காணியில் இருந்து பிரித்து ஒதுக்கிய இருபத்து மூன்று பேர்ச்சுகள் (0ஏ. 0றூ. 23பே.) விஸ்தீரணம் கொண்டதாகவும் வடக்கில் : லொட் 1 ; கிழக்கில் : கிராமத்தில் இருந்து பிரதான வீதிக்குச் செல்லும் 10 அடி அகலப்பாதை ; தெற்கில் : லொட் 3 ; மேற்கில் : லொட் 1 பி ஆகிய எல்லைகளுக்கு உட்பட்ட காணியாகும். இது கண்டி மாவட்ட காணிப்பதிவகத்தில் பி 409/ 169 இல் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

ஈ. எம். உபதிஸ்ஸ பண்டார,
பிரதான முகாமையாளர்.

இலங்கை வங்கி மேற்தரக் கிளை,
கண்டி.

5-393

**வரையறுக்கப்பட்ட ஹட்டன் நஷனல் வங்கி - வத்தளை கிளை**

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விஷேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் ஹட்டன் நஷனல் வங்கிப் பணிப்பாளர் சபையினால் நிறைவேற்றப்பட்ட தீர்மானம்*

**மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், ஹேவகம் கோறளையின் பல்லேபற்றுவில் ஹோமகம பிரதேச சபையின் ஹோமகம என்னுமிடத்தில் கட்டுவன வீதியில் அமைந்துள்ளதும் 'மிலககவத்தை' என அழைக்கப்படுவதுமான ஆதனம் இது. 1990 ஆம் ஆண்டு மே மாதம் 28 ஆந் திகதி அளவையாளர் நாயகத்தினால் வரையப்பட்டதுமான CO 6996 இலக்க வரைபடத்தில் துண்டு 94 ஆகக் காட்டப்பட்டதும் (CO 6706 வரைபடத்தில் காட்டப்பட்டுள்ள துண்டு 3, 13 இனதும் ஒரு பகுதி) பிரிக்கப்பட்டு வரையறுக் கப்பட்டதுமான காணித்துண்டு விஸ்தீரணம் 0.1826 ஹெக்.**

**குறித்த வரைபடத்தில் 149, 53, 62, 73 ஆம் இலக்க துண்டுகளான பாதை நிலத்தால் போக்குவரத்துச் செய்யும் உரிமையும்.**

**மேற்படி ஆதனத்தில் உள்ள பின்னால் விபரிக்கப்படும் அசைவுள்ள ஆதனங்களும், மற்றும் வியாபார இருப்பும் பொருட்களும் சாதனங்களும் மற்றும் ஹோமாகம கட்டுவான UDA தொழில்வளப்பகுதியில் 44 ஆம் இலக்க தொழிற்சாலையில் அமைந்துள்ள பின்வரும் பொருட்களும் உள்ளடங்கும்.**

**தொழிற்சாலையிலுள்ள பின்வரும் இயந்திர சாதனங்களாவன**

**அசைவுள்ள சொத்துக்கள்**

1. **கெவி டியுட்டி ஓம்பிக்ரப் வேகம் உள்ள ஒரு சோடி உருளைகள், தட்டுகள், உஷ்ண சாதனம், மின்சார இயந்திர அமுக்கிகள், மோட்டார் இயக்க நீல் வைப்பகம் அளவு 56 தொடர் இலக்கம் 1212 மொடல் SP 203**
2. **மைக்குரோ ஒட்டு சாதனம் தொடர் இலக்கம் 1213 மொடல் SP 105**
3. **மைக்குரோ போர்பார் றெட்டறி கட்டிங் கிறிசிங் இயந்திரசாதனம் தொடர் இலக்கம் 1214 மொடல் RF 305**
4. **மைக்குரோ எக்ஸ்என்றிக் சுலோட்டர் தொடர் இலக்கம் 1216 மொடல் EX 306**
5. **மைக்குரோ அக்குலர்பெக்ஸ் தையல் இயந்திரம் தொடர் இலக்கம் 1219 மொடர் SA III**
6. **மைக்குரோ கெவிடியுட்டி கைப்பாவனை டியுடி போட்கட்டர் 55**

**மேற்கூறிய சாதனங்கள் யாவும் மற்றும் காலத்துக்கு காலம் சேர்க் கப்பட்டதுமான இயந்திர சாதனங்களும் நிலையான கட்டுமானங் களுக்கு பொருத்தப்பட்டுள்ள சாதனங்களும் முதலாவது ஆதன டாப்பில் விபரிக்கப்பட்டவைகளுடன் உள்ளடங்கும் ஏலவிற்பனை**

மேற்படி ஆதனம் வர்ண அசோசியேட் என்னும் வியாபாரத்தைப் பங்குதாரர் முறையில் கொண்டு நடத்துபவர்களான நாலின் சனத்குமார் வர்ணகுலசூரியவினாலும் உடுவிதானலாகே டொனா சுதர்மா பிரியாந்தி பெரேரா அவர்களால் ஹட்டன் நஷனல் வங்கி லிமிட்டெட்டுக்கு வருமதியான கொடுப்பனவுகளைச் செய்யத் தவறியமையினால் ஹட்டன் நஷனல் வங்கியால் எனக்களிக்கப்பட்ட அதிகாரத்தின் பிரகாரம் 2006 ஆம் ஆண்டு ஆனி மாதம் 9 ஆந் திகதி காலை 10.00 மணிக்கு குறித்த இடத்தில் மேல் விபரிக்கப்பட்டுள்ள ஆதனத்தை ஏலவிற்பனை செய்யப்படுமென்பதை இத்தால் அறிவிக்கிறேன்.

**தீர்மானங்களின் அறிவித்தல்.**- 2004.12.10 ஆந் திகதியிட்ட அரசாங்க வர்த்தமானியையும் 2004.12.10 ஆந் திகதியிட்ட "திவயின", "டெயிலி நியூஸ்", "தினகரன்" ஆகிய புதின் பத்திரிகைகளையும் பார்க்கவும்.

**கொடுப்பனவு செய்யும் முறைகள்.**- ஏல விற்பனை முற்றாக்கியதன் பின் கொள்வனவுகாரர் பின்வரும் பண வைப்புக்களை ஏல விற்பனையாளரிடம் உடன் வைப்புச் செய்தல் வேண்டும் :

1. கொள்வனவுத் தொகையில் 10%
2. உள்ளூர் சபையின் கொடுப்பனவு 1%
3. கொள்வனவு விலையில் ஏலவிற்பனையாளரின் கொமிசன் 2 1/2 %
4. விற்பனைச் செலவுகளும் பிறவும்
5. விற்பனை நிபந்தனைகளை அத்தாட்சிப்படுத்தும் நொத்தாரிஸ் ரூ. 2,000.

விற்பனை நடந்து 30 நாட்களுக்குள் மிகுதித் தொகையான 90% வீதத்தைக் கொழும்பு 10, ரி. பி. ஜாயா மாவத்தையில் 479 இலுள்ள ஹட்டன் நஷனல் வங்கி லிமிட்டெட்டின் சிரேஷ்ட முகாமையாளரிடம் கொடுப்பனவு செய்தல் வேண்டும். தொலைபேசி - 2661805/2661808. மேலதிக விபரங்களை மேற்கூறிய விலாசத்தில் பெற்றுக்கொள்ள லாம்.

ஏர்வின் பெரேரா,
(சமாதான நீதவான்),
ஏல விற்பனையாளர்,
நீதிமன்ற ஆணையாளர்,
விலை மதிப்பாளர், மொழி பெயர்ப்பாளர்.

இல. 3, பாகொட வீதி,
நுகேகொட.
தொலைபேசி : 2810145/0777-212602

5-386

---

**வரையறுக்கப்பட்ட செலான் வங்கி-கிராண்பாஸ் கிளை**

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 8 ஆம் பிரிவின்கீழ் விற்பனை*

**பிரித்து நிர்ணயிக்கப்பட்ட முழுமையாக பெறுமதிமிக்க வர்த்தக வளவுகள் (மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம் மற்றும் மாநகர சபை எல்லைகளுக்குள், உத்தரவுபெற்ற நில அளவையாளர் எம். பாலகிருஷ்ணன் அவர்களால் தயாரிக்கப்பட்டு 1990 பெப்புருவரி 16 ஆந் திகதியிடப்பட்ட கூட்டாட்சி வரைபடம் இல. 431 இல் குறிப்பிடப்பட்டதும் பஞ்சிகாவத்த வீதி, வரிமதிப்பு இல. 228 ஐக் கொண்டதும் தரைத் தளத்தில் கூறுகள் 2 என அடையாளமிடப்பட்டது மாகும்).**

**(காணியின் விஸ்தீரணம் : 1623.87 ச. அடி)**

**தனது உட்பிரவேசிக்கும் வழி ஏயூ2 இன் உடன் பொது இடப்பரப்பாக கொண்ட மற்றும் சொல்லப்பட்ட கூறு 2 இன் எல்லைகளாவன-**

*வடக்கு: வரிமதிப்பு இலக்கங்கள் 234 மற்றும் 234ஏ (பஞ்சிகாவத்தை வீதி) ஐக் கொண்ட வளவுகளிலிருந்து இக்கூறை பிரிக்கும் சுவரின் மத்தி மற்றும் ஏயூ2 (படிக்கட்டு சாலை); கிழக்கு: சீஈ2 (தோட்ட வெளி) இலிருந்து இக்கூறை பிரிக்கும் சுவரின் மத்தி ; தெற்கு: சீஈ 1 தோட்ட வெளியிலிருந்து இக்கூறை பிரிக்கும் சுவரின் மத்தி ; தெற்கு : சீஈ1 தோட்ட வெளியிலிருந்து இக்கூறை பிரிக்கும் சுவரின் மத்தி மற்றும் கூறு 1 இலிருந்து இக்கூறை பிரிக்கும் சுவரின் மத்தி ; மேற்கு : பஞ்சிகாவத்தை வீதி வழியே பாதசாரி நடைபாதையிலிருந்து இக்கூறை பிரிக்கும் சுவரின் மத்தி ; உச்சி : இக்கூறுகளுக்கு மேலாகவுள்ள கூறு 3 இன் தரையின் மத்தி ; இடை : இக்கூறின் தரைத்தளம். இது சொல்லப்பட்ட கூட்டாட்சி வரைபடம் இல. 431 இற்கமைய, பொது மூலகங்களின் விகிதமுறையான பங்கு 18.38% ஐக் கொண்டது ; கொழும்பு காணிப்பதிவகத்தில் தலைப்பு கூட்டாட்சி ஏக 32/37 இல் பதிவுசெய்யப்பட்டுள்ளது.*

*பொது மூலகங்கள் :*

*(1) கட்டிடம் அமைந்துள்ள இக்காணி*

*(2) பக்கம் 3 (தோட்ட வெளியாய் இருக்கின்ற சீஈ) இல் தரை தளத்தில் காட்டப்பட்ட சீ. ஈ. 1 (மஞ்சள் நிறத்தினால் ஓரங்கள் இடப்பட்ட) என அடையாளமிடப்பட்ட காணியின் மிகுதிப் பாகங்கள், சீஈ 2 (நீல நிறத்தினால் ஓரங்கள் இடப்பட்ட மற்றும் சீஈ 3 பச்சை நிறத்தினால் ஓரங்கள் இடப்பட்ட)*

*(3) இக்கட்டிடத்தின் அடித்தளங்கள், தூண்கள், இரும்புத் தூண்கள், உத்தரங்கள், தாங்கிகள், பிரதான சுவர்கள் மற்றும் கூரை*

*(4) (i) ஏயூ 1 முதலாம் தளம் மற்றும் இரண்டாம் தளங்களில் முறையே படிக்கட்டு சாலையிலிருந்து கூறு 3 மற்றும் கூறு 4 வரை*

*(ii) ஏயூ2 தரை தளம் (இதன் பக்கம்: 3, 4 மற்றும் 5 இல் தரை தள வரைபடம், முதலாம் தள வரைபடம் மற்றும் இரண்டாம் தள வரைபடத்தில் காட்டப் பட்டுள்ள துணைக் கூறுகளுக்கு ஒதுக்கப்பட்டி ருக்கின்ற ஏயூ 1 மற்றும் ஏயூ 2) இல் படிக்கட்டு சாலையிலிருந்து கூறு 2 வரை*

*(5) இக்காணிக்குள் கால்வாய்களுக்கான இடப்பரப்பு*

*(6) இக்கட்டிடத்தின் பாதுகாப்பு மற்றும் பராமரிப்புக்காக வழங்கப்பட்ட வேறு வசதிகள்*

*(7) மண் சாக்கடை சேவைகள் :*

*(8) (i) தரைதளம் சீஈ 1 இலிருந்து கூறு 1 வரை*

*(ii) தரைதளத்தில் சீஈ 2 இலிருந்து கூறு 2 வரை, முதலாவது தளத்தில் கூறு 3 மற்றும் இரண்டாவது தளத்தில் கூறு 4 (இதன் 3 ஆம் பக்கத்தில் தரைதள வரைபடத்தில் காட்டப்பட்டுள்ள பொது மூலகங்கள் ஒதுக்குகள் சீஈ1, சீஈ2 மற்றும் சீஈ3 ஆகும்.)*

*(iii) தரை தளத்திலுள்ள கூறுகள் 1 மற்றும் 2 இற்கு சீயூ3.*

*துணை கூறு :*

*கூட்டாட்சி வரைபடம் இல. 431 (கூட்டாட்சி ஆதனத்தில் அமைந்துள்ள கூட்டாட்சி ஆதனக் கட்டிடத்தின் உள்ளிருந்தும் புறமுமாக) இன் பக்கங்கள் 3, 4 மற்றும் 5 இல் தரை தள வரைபடம், முதலாவது தள வரைபடம் மற்றும் இரண்டாவது தள வரைபடத்தில் காட்டப்பட்டுள்ள துணை கூறு ஏயூ 2 முழுவதும் இதன் விஸ்தீரணம் 200 ச. அடி ஆகும். கூட்டாட்சி வரைபடம் இல. 431 இற்கமைய கூறு ஏயூ 2 இன் எல்லைகளாவன- வடக்கு: வரிமதிப்பு இலக்கங்கள் 234 மற்றும் 234ஏ பஞ்சிகாவத்தை வீதி) ஐக் கொண்ட வளவுகளிலிருந்து இக்கூறை பிரிக்கும் சுவரின் மத்தி ; கிழக்கு : கூறுகள் 2, 3 மற்றும் 4 இலிருந்து இக்கூறை பிரிக்கும் சுவரின் மத்தி மற்றும் சீஈ2 இன் மீதான இடப்பரப்பு (தோட்ட இடப்பரப்பு) ; தெற்கில் : கூறுகள் 2, 3 மற்றும் 4 இலிருந்து இக்கூறை பிரிக்கும் சுவரின் மத்தி ; மேற்கு: கூறுகள் 2, 3, 4 இலிருந்து இக்கூறை பிரிக்கும் சுவரின் மத்தி ; உச்சி : இக்கூறின் கூறை ; இடை : இக்கூறின் தரைத்தளம்*

*அத்துடன்*

*முழுமையாக பெறுமதிமிக்க வர்த்தக காணித்துண்டு (மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம் மற்றும் மாநகர சபை எல்லைகளுக்குள் அளுத்கடை கிழக்கு : ஸ்ரீ சங்கராஜ மாவத்தை (முன்னர் ஸ்கின்னர்ஸ் வீதி, தெற்கு என அறியப்பட்ட) வழியே அமைந்துள்ளதும் ஸ்ரீ சங்கராஜ மாவத்தை, வரிமதிப்பு இல. 215/1 ஐக் கொண்டதும் உத்தரவுபெற்ற நில அளவையாளர் எஸ். இராஜேந்திரா அவர்களால் தயாரிக்கப்பட்டு 1964 ஒகத்து 22 ஆந் திகதியிடப்பட்ட வரைபடம் இல. 2967 இல் குறிப்பிடப்பட்டு துண்டு 8 என அடையாளமிடப்பட்டதுமான காணியினது)*

*(காணியின் விஸ்தீரணம் : 3.25 பேர்ச்சுக்கள்)*
*ஏல விற்பனை*

*(கடப்பாடுடையவர்/ஈடுவைத்தவரான கொழும்பு 10 இல் "பந்துல ரிரேடிங் என்ரபிரைஸஸ்" எனும் பெயர் வடிவிலான நிறுவனத்தின்கீழ் ஏக உரிமையாளராக வியாபாரத்தைக் கொண்டுநடாத்தும் கலஹேனகே அஜித் பந்துலசேன, 1995.11.17 திகதியிடப்பட்ட முறி இல. 698, 1995.05.03 திகதியிடப்பட்ட முறி இல. 3255, 1993.07.21 திகதியிடப்பட்ட முறி இல. 1203, 1995.06.21 திகதியிடப்பட்ட முறி இல. 3346, 1993.11.05 திகதியிடப்பட்ட முறி இல. 1492 மற்றும் 1993.09.09 திகதியிடப்பட்ட முறி இல. 1342 ஆகியவற்றின் மீதான வரவேண்டிய கொடுப்பனவில் தவணை தவறியுள்ளார்.)*

வரையறுக்கப்பட்ட செலான் வங்கியினால் எனக்கு அளிக்கப்பட்ட அதிகாரத்தின்கீழ் மேற்குறிப்பிடப்பட்ட ஆதனத்தை 2006, யூன் 17 ஆந் திகதி சனிக்கிழமை மு. ப. 10.30 மணிக்கு அதே இடத்தில் நான் பகிரங்க ஏலம்மூலம் விற்பனை செய்வேன்.

**தீர்மான அறிவித்தலுக்கு.**- 2000.07.21 ஆந் திகதி அரசாங்க வர்த்தமானியையும் 2000.07.12 ஆந் திகதிய "டெய்லி நியூஸ்", "தினமின" மற்றும் 2000.07.26 ஆந் திகதிய "தினகரன்" ஆகிய பத்திரிகைகளையும் மற்றும் விற்பனை அறிவித்தலுக்கு 2006.05.26 ஆந் திகதிய அரச வர்த்தமானியையும் பார்க்கவும்.

**கொடுப்பனவு செய்யும் விதம்:**

(1) ஏல முடிவில் கொள்வனவு விலையின் 10% (பத்து வீதம்) ;

(2) விற்பனைத் திகதியிலிருந்து 30 வேலை நாட்களுக்குள் கொள்வனவு விலையின் மிகுதி 90% (தொண்ணூறு வீதம்) ;

(3) உள்ளூர் அதிகார சபைக்கு செலுத்த வேண்டிய உள்ளூர் விற்பனை வரி 1% (ஒரு வீதம்) ;

(4) ஏலதாரரின் தரகு விற்பனை விலையின் 2 1/2% (இரண்டரை வீதம்) ;

(5) ரூபா 43,145 விஞ்சாதவாறு மொத்த விளம்பரச் செலவு களின் 50% (ஐம்பது வீதம்) ;

(6) எழுதுவினைஞர் மற்றும் கூவுவோர் கட்டணம் ரூபா 500 ;

(7) விற்பனை நிபந்தனைகளுக்கான நொத்தாரிசு அத்தாட்சிப் படுத்தற் கட்டணம் ரூபா 4,000.

உரித்து உறுதிகளையும் அவை தொடர்பான வேறு ஆவணங்களையும் "கொழும்பு 3, காலி வீதி, இல. 90, 'செலிங்கோ செலான் டவர்ஸ்', 12 ஆவது தளம், வரையறுக்கப்பட்ட செலான் வங்கி பிரதிப் பொது முகாமையாளர் - சட்டசம்பந்தமான பகுதி" இடம் பார்வையிடவும் பெற்றுக்கொள்ளவும் முடியும். தொலைபேசி இல. : 074-701256-7, 074-701291, 2456258.

டன்ஸ்டன் கெலார்ட்,
நீதிமன்ற ஆணையாளரும் தரகரும்,
நிபுணத்துவம்பெற்ற ஏலதாரர்,
ஆதன முகவரும் விலைமதிப்பிடுநரும்.

381 1/1, காலி வீதி,
கொழும்பு 4.

தொலைபேசி இல. : 2591167
தொலைபேசி/தொலைநகல் இல. : 2584874, 250038
துரித அழைப்பு : 0772-250422

5-395